## சாதாரணக்கூட்டம்

2023–ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 29–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திரு.மோ.செல்வராஜ்,
தலைவர்
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

### பொருள் எண்.1

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் செப்டம்பர்–2023 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.252 நாள். 29.09.2023**

பதிவுசெய்யப்பட்டது.

### பொருள் எண்.2

பள்ளிபாளையம் நகராட்சியில் செப்டம்பர் மாதம் 24–ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எ ண் | வரியின் விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 4.96 | 201.78 | 0.28 | 58.01 | 4.68 | 143.77 |
| 2. | காலியிட வரி | 2.48 | 3.73 | 2.46 | 1.54 | 0.03 | 2.19 |
| 3. | தொழில்வரி | 14.38 | 8.26 | 14.15 | 4.80 | 0.22 | 3.47 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 6.80 | 70.94 | 0.69 | 15.79 | 6.11 | 55.15 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | வரியில்லா இனம் | 0 | 19.63 | 0 | 18.30 | 0 | 1.33 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.23 | 48.12 | 0.02 | 12.38 | 0.20 | 35.74 |
| | **மொத்தம்** | **28.85** | **352.47** | **17.60** | **110.81** | **11.25** | **241.66** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.**1523/2013/சி1**

**தீர்மான எண்.253 நாள். 29.09.2023**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

பள்ளிபாளையம் நகராட்சி பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான தளவாட சாமான்கள் இருப்பு எதுவும் இல்லாத நிலையில் தேவைக்குகேற்ப தளவாடசாமான்களை கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ.3,59,500/– க்குள் செலவினம் மேற்க்கொள்ளவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான தளவாட சாமான்களை ரூ.3,59,500/–க்குள் கொள்முதல் செய்யவும், இப்பணிக்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**1216/2023/எச்1**

**தீர்மான எண்.254 நாள். 29.09.2023**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.4**

பொதுசுகாதாரப் பணிகளுக்கு தேவையான தளவாட சாமான்களை கொள்முதல் செய்ய **30.08.2023**–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் **15.09.2023**–ந் தேதி கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்

| வ. எண். | பொருளின் பெயர் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|---|
| | | | M/s. ஜெய்ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்சன் புரோமோட்டார்ஸ் அண்டு ரியல் எஸ்டேட், 105 திருச்செங்கோடு ரோடு, பள்ளிபாளையம் (ரூ.பை) | M/s SRV கன்ஸ்ட்ரக்சன், 5-6/327 வெடியரசம்பாளையம் ரோடு, பள்ளிபாளையம் (ரூ.பை) |
| 1 | வாள்மண் வெட்டி பிடியுடன் | 1 | 520 /- | 550 /- |
| 2 | கூட்டுமார் (தெரு கூட்டுதல்) | 1 | 290 /- | 350 /- |
| 3 | சாக்கடை கொக்கி | 1 | 380 /- | 420 /- |
| 4 | 5 பல் கொக்கி பிடியுடன் | 1 | 340 /- | 350 /- |
| 5 | 10 பல் கொக்கி பிடியுடன் | 1 | 490 /- | 520 /- |
| 6 | பல்ஸ் பாக் மிஷின் | 1 | 55650 /- | 62000 /- |
| 7 | கேஸ் பாக் சிறியது | 1 | 13800 /- | 13660 /- |
| 8 | அரிவாள் | 1 | 650 /- | 650 /- |
| 9 | காட்டன் கையுறை | 1 | 60 /- | 80 /- |
| 10 | சவுல் பிடியுடன் | 1 | 560 /- | 590 /- |
| 11 | ஸ்டீல் முரம் | 1 | 300 /- | 320 /- |
| 12 | 3 பல் கொக்கி பிடியுடன் | 1 | 330 /- | 380 /- |
| 13 | பிளாஸ்டிக் மண்சட்டி | 1 | 250 /- | 230 /- |
| 14 | 18 லி கிருமிநாசினி தெளிப்பான் | 1 | 4012 /- | 4190 /- |
| 15 | மூங்கில் தட்டுக்கூடை | 1 | 380 /- | 410 /- |
| 16 | ஒளிரும் ஜாக்கெட் (மஞ்சள்,ஆரஞ்சு) | 1 | 300 /- | 310 /- |
| 17 | 6 அடி கடப்பாரை | 1 | 900 /- | 950 /- |
| சதவீதம் ( GST 18% உட்பட) | | | குறைவு | அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான தளவாட சாமான்களை கொள்முதல் செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய M/s ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்சன் புரோமோட்டார்ஸ் & ரியல் எஸ்டேட், 105 திருச்செங்கோடு ரோடு, பள்ளிபாளையம் என்ற நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1216/2023/எச்1

**தீர்மான எண்.255 நாள். 29.09.2023**

பதிவுசெய்யப்பட்டது.

## <u>பொருள் எண்.5</u>

பொதுசுகாதாரப் பணிகளுக்கு 2023–2024 நிதியண்டிற்கு தேவையான பிளிச்சிங் பவுடரை அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற நிறுவனத்தில் கொள்முதல் செய்து கொள்ள இந்நகர்மன்றம் தீர்மானம் 50 நாள்.30.03.2023–ந் தேதி அனுமதி வழங்கியுள்ளது. மேற்காணும் நிறுவனத்தின் செயலர் தனக்கு உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளதால் என்னால் பிளிச்சிங் பவுடரை சப்ளை செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பொதுசுகாதார பணிகளை தொடர்ந்து மேற்க்கொள்ள 27 டன் பிளிச்சிங் பவுடரை டன் 1–க்கு 47200/–வீதம் (SGST 9%, CGST 9%) உட்பட ரூ.12,74,400/–க்கு கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான பிளிச்சிங்பவுடர் 27 டன் ரூ.12,74,400/–க்கு கொள்முதல் செய்யவும், இப்பணிக்கு பொதுசுகாதாரம் அவசர, அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.322/2023/எச்1

**தீர்மான எண்.256 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் எண்.6</u>

பொதுசுகாதாரப் பணிகளுக்கு தேவையான பிளிச்சிங்பவுடரை கொள்முதல் செய்ய 04.09.2023–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு செய்யபட்டதில் 22.09.2023–ந் தேதி கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை டன் 1–க்கு GST 18% உட்பட ரூ.பை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ்,<br>97A, ஊஞ்சப்பாளையம்,<br>பூதப்பாடி, பவானி. | 46,610 /– | குறைவு |
| 2 | M/s SRV கன்ஸ்ட்ரக்சன்,<br>5-6/327 வெடியரசம்பாளையம் ரோடு,<br>பள்ளிபாளையம் | 47,200 /– | அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான பிளிச்சிங்பவுடரை கொள்முதல் செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97A, ஊஞ்சப்பாளையம், பூதப்பாடி, பவானி என்ற நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.322/2023/எச்1

**தீர்மான எண்.257 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சியில் பணிபுரியும் துய்மை பணியாளர்கள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள் மற்றும் குடிநீர் திட்டப்பணியாளர்களுக்கு 2023–ம் ஆண்டுக்கு தீபாவளி பண்டிகைக்கு சீருடைகளை அரசு சார்ந்த வசந்தம் கே– ஆப்டெக்ஸ் நிறுவனம் முலம் கொள்முதல் செய்வதற்கும், சீருடைகள் தைக்க உரிய தொகையினை வழங்கவும், தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ,1,50,000/– ஆகும் எனவும் இச்செலவினத்தை நகராட்சியின் பொது றிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1229/2023/எச்1

**தீர்மான எண்.258 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

பள்ளிபாளையம் நகராட்சியின் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLA Fund) 2022 - 2023** ன் கீழ்கண்ட வேலை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 06.09.2023 – ம் தேதி புதன்கிழமை அன்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2022–23</u> **<u>MLA FUND 2022-23</u>** வார்டு எண்.15 ஓம் சக்தி கோவில் வீதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | 8,00,000/- | கே.எஸ்.மாரியப்பன், 716பி, குதிரைகல் மேடு, காடப்பநல்லூர் (P.O), | 0.01% குறைவு |
| | | | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன், 611, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | 0.04 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.எஸ்.மாரியப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1229/2023/இ1

**தீர்மான எண்.259 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.9</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சி துவக்கப்பள்ளிகளில் பள்ளி மேம்பாட்டு திட்ட நிதி (School Improvement Scheme) **2022–23** ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி கடித ந.க.எண்.29406/2022/SS2, நாள்.**20.05.2023 –** ன் படி கீழ்கண்ட மேம்பாட்டுப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு (ரூ.இலட்சம்)** |
|---|---|---|
| 1 | ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் புதியதாக ( 1 கட்டிடம்) இரண்டு வகுப்பறைகள் கட்டும் பணி | 30.00 |
| 2 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் புதியதாக கட்டப்படவுள்ள ஆறு வகுப்பறைகள் கட்டும் பணி | 100.00 |
| 3 | நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் புதியதாக (1 கட்டிடம்) இரண்டு வகுப்பறைகள் கட்டும் பணி | 30.00 |
| 4 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் மேம்பாட்டுப்பணிகள் செய்தல் | 30.00 |
| 5 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் கழிப்பிடம் கட்டும் பணி செய்தல் | 10.00 |
| 6 | நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் மேம்பாட்டுப்பணிகள் செய்தல் | 35.00 |
| 7 | நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதி செய்தல் | 3.00 |
| 8 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் மோட்டார் அறையுடன் கூடிய ஆழ்துளைக் கிணறு அமைத்து பள்ளி மாணவர்களுக்கு தண்ணீர் வசதி | 6.00 |
| 9 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் கலையரங்கம் கட்டும் பணி | 19.80 |
| 10 | நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் கலையரங்கம் கட்டும் பணி | 19.80 |
| 11 | ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் கலையரங்கம் கட்டும் பணி | 19.80 |
| | மொத்தம் | **303.40** |

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1541/2023/இ1

**தீர்மான எண்.260 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சனி சந்தை வளாகத்தில் தினசரி சந்தை, இடுகாடு பகுதியில் எரிவாயு தகனமேடை மற்றும் நாட்டாக்கவுண்டர் பகுதியில் பூங்கா அமைத்தல் ஆகிய பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, இத்திட்டத்திற்கான பிரேரணை தயார் செய்து, அதற்கான டைப் டிசைன் பெற்று அனுமதி பெற தனியார் ஆலோசகரை நியமித்து பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.1,20,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.569/2023/இ1

**தீர்மான எண்.261 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

பள்ளிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 2021–22 ன் கீழ் புதன்சந்தை வளாகத்தில் பொதுக்கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.36.28 லட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.5990/2022/எஸ்.பி.எம் நாள்.11/04/2022–ல் பொதுக்கழிப்பிடம் கட்ட அனுமதி பெறப்பட்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில் கழிப்பிடத்தின் முகப்பு தோற்றம் மற்றும் ஆண்கள் பகுதி, பெண்கள் பகுதி என பிரிக்கப்பட்டதற்காக PVC தடுப்புகள் அமைக்கும் ஆகும் செலவினம் ரூ.2,70,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.2095/2023/இ1

**தீர்மான எண்.262 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.12</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள நகர்மன்ற கூடம் மற்றும் பொறியாளர் அறை ஆகிய இடங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் குளிர்சாதன இயந்திரங்கள் உயர் மின் அழுத்தத்தின் காரணமாக பழுதடைந்து விட்டதால் குளிர்சாதன இயந்திரத்தின் பழுதினை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்றதில் ரூ.15,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.439/2023/இ1

**தீர்மான எண்.263 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.13</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள நகர்மன்ற கூடம் மற்றும் பொறியாளர் அறை பயன்படுத்தப்பட்டு வரும் குளிர்சாதன இயந்திரங்கள் உயர் மின்னழுத்தின் காரணமாக பழுதடைந்துள்ளதனை சரிசெய்து மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 12.09.2023 ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 3.30 மணிக்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கே.விஜய்பாபு,<br>ஏ.சி.மெக்கானிக்<br>23/ஏ7, ரூபி காம்பளக்ஸ்,பள்ளிபாளையம் | 14,950.00 |
| 2 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | 15,250.00 |
| 3 | கே.எஸ்.மாரியப்பன்,<br>716பி,குதிரைகல்மேடு,<br>காடப்பநல்லூர் (P.O), பவானி | 15,950.00 |

அலுவலக குறிப்பு

1). மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய கே.விஜய்பாபு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2). மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.439/2023/இ1

**தீர்மான எண்.264 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள கிரைண்டர் பழுதாகி உள்ளது என தெரிவித்ததின் பேரில் மின்பணியாளர் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் கிரைண்டர் பழுதாகி முற்றிலும் இயக்கப்பட முடியாத சூழ்நிலையில் உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பழுதடைந்த கிரைண்டரை சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.13,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1179/2023/இ1

**தீர்மான எண்.265 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.15</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள கிரைண்டர் பழுதினை சரிசெய்ய **15.09.2023** ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை **3.30** மணிக்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | விஎன்பி வைண்டிங் அன்டு டிரான்ஸ்,<br>**81**, காந்திபுரம் முதல் வீதி,<br>ஆவாரங்காடு, பள்ளிபாளையம் | 12,990.00 |
| 2 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>**611**, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | 13,250.00 |
| 3 | கே.எஸ்.மாரியப்பன்,<br>**716**பி,குதிரைகல்மேடு,<br>காடப்பநல்லூர் (P.O), பவானி | 13,950.00 |

அலுவலக குறிப்பு

**1).** மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய கே.விஜய்பாபு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**2).** மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர்அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.**1179/2023/**இ1

**தீர்மான எண்.266 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை விளக்கும் வகையில் விளம்பரம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமம் திட்டம் விளம்பரம் செய்ய அரசிடம் இருந்து வழங்கப்படும் விளம்பர வடிவமைப்புகள் தயார் செய்து நிறுவி விளம்பரம் தெரிவித்துள்ளார். அதன் விபரம் பின்வருமாறு.

1. 10 அடி உயரம் X 10 அடி அகலம் – 3 எண்ணிக்கைகள்
2. 8 அடி உயரம் X 4 அடி அகலம் – 1 எண்ணிக்கைகள்
3. 4 அடி உயரம் X 2 அடி அகலம் – 1 எண்ணிக்கைகள்
4. 10 அடி உயரம் X 10 அடி அகலம் – 3 எண்ணிக்கைகள்
5. 6 அடி உயரம் X 4 அடி அகலம் – 6 எண்ணிக்கைகள்
6. 10 அடி உயரம் X 10 அடி அகலம் – 3 எண்ணிக்கைகள்

எனவே, மேற்கண்ட பணிகளுக்கு விளம்பர பலகை தயார் செய்ய ஆகும் செலவினம் ரூ.31,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1559/2023/இ1

**தீர்மான எண்.267 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை விளக்கும் வகையில் விளம்பரம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமம் திட்டம் விளம்பர பலகை தயார் செய்யும் பணிக்கு 15.09.2023–ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | எஸ்.ஜே,டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டிங், 57/1, ஸ்ரீ குரு டவர்ஸ், நகராட்சி அலுவலகம் அருகில், சங்ககிரி மெயின் ரோடு, பள்ளிபாளையம் – 638 006. | ரூ. 30,500/– |
| 2 | ஸ்டார் பிளக்ஸ் பிரிண்டிங், சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் | ரூ.31,900/– |
| 3 | ஆலயம் பிளக்ஸ் பிரிண்டிங், சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் | ரூ.32,200/– |

அலுவலக குறிப்பு

1). மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய எஸ்.ஜே,டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டிங், அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2). மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1559/2023/இ1

**தீர்மான எண்.268 நாள். 29.09.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (IUDM-2011-2012) பயோகேஸ் பவர் பிளாண்ட் நிறுவப்பட்டு இதன் மூலம் மின்சாரம் தயாரிக்கப்பட்டு உரக்கிடங்கு மையத்திலுள்ள தெரு விளக்குகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, இந்த பிளாண்டில் காய்கறிகளை துண்டிக்க பயன்படும் இயந்திரம் பழுதாகி உள்ளது என மின்பணியாளர் தெரிவித்ததின் பேரில் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் இயந்திரம் இயக்கமுடியாத நிலையில் உள்ளது என கண்டறியப்பட்டது. மேலும், இயந்திரம் இயக்க முடியாத நிலையில் உள்ளதால் மின்சாரம் உற்பத்தி செய்வதில் தடை ஏற்பட்டுள்ளது. எனவே, காய்கறிகளை துண்டிக்கும் இயந்திரம் (Shredder

Machine) புதியதாக வாங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1179/2023/இ1

**தீர்மான எண்.269 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.19</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 15.09.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி திட்டம் (General Fund) 2023–24</u>** வார்டு எண் 4 வள்ளி மணாளன் திருமண மண்டபம் அருகில் உள்ள கழிப்பிடத்திற்கு கேட் மற்றும் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 2,90,000/- | ஸ்ரீசக்தி அசோசியேட்ஸ், 97ஏ, ஊஞ்சப்பாளையம், பூதப்பாடி அஞ்சல், | 0.03% குறைவு |
| | | | கே.எஸ்.மாரியப்பன், 716பி, குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 1.23 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், திருவாளர்கள் ஸ்ரீசக்தி அசோசியேட்ஸ், பவானி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1092/2023/இ1

**தீர்மான எண்.270 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 15.09.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **கல்விநிதி திட்டம் (Education Fund)2023–24** பள்ளிபாளையம் நகராட்சியில் ஆவாரங்காடு பகுதியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் நகராட்சி துவக்கப்பள்ளி கண்காணிப்பு கேமிரா அமைக்கும் பணி | 3,25,000/- | கிரியேட்டிவ் விசன், 467, சக்தி ரோடு, ஈரோடு போர்ட், ஈரோடு. | 0.02% குறைவு |
| | | | ஜிஎஸ்சி டெக்னாலஜி, 39டி, ஆர்.பி காம்பளக்ஸ், பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம் – 638183. | 0.32 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.02% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், திருவாளர்கள் கிரியேட்டிவ் விசன், ஈரோடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1092/2023/இ1

**தீர்மான எண்.271 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.21

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 கிருஷ்ணன் கோவில் பின்புறம் பொதுக்கழிப்பிடம் ஒன்று சுமார் 10 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இக்கழிப்பிடம் கோவிலுக்கு பின்புறமாக காவிரி ஆற்றங்கரையோறம் உள்ளதாலும், மக்கள் நடமாட்டம் அதிகளவில் இப்பகுதியில் இல்லாத காரணத்தினாலும், கழிப்பிடத்தினை பயன்படுத்துவோர் எண்ணிக்கை பெரும்பாலும் குறைந்து விட்டது. இதன் காரணமாக சமூக விரோதிகள் நடமாட்டம் இக்கழிப்பிடத்திற்குள் அதிகமாகி விட்டது. மேலும், இக்கழிப்பிடம் கட்டப்பட்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்ட காரணத்தினால் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே இக்கழிப்பிடத்தினை இடித்துஅப்புறப்படுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1119/2023/இ1

**தீர்மான எண்.272 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.22

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி வணிகவளாக கடைகள் நெடுஞ்சாலை துறை விரிவாக்க பணிக்காக ஜூன் 2023–ல் இடிக்கப்பட்டுவிட்டது . இதில் கடை எண் 8 –ல் உள்ள குத்தகை உரிமைதாரர் .திரு.பி.தாமோதரன் என்பவர் கடைக்கான காலம் கடந்த வைப்புத்தொகைரு,15272/–ஐ திரும்பி வழங்கும்படி விண்ணப்பித்துள்ளார். காலம் கடந்த வைப்புதொகை ரு.15272/– திரு.பி.தாமோதரன் என்பவரின் கணக்கில் இருப்பு உள்ளது எனவே , தொகை ரு.15272/–ஐ திரு.பி.தாமோதரன் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்.1268/2023/அ1

**தீர்மான எண்.273 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.23</u>**

அரசாணை நிலை எண். 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள். 19.09.2008–ன் மூலம் ஆண்டு குத்தகை இனங்களை மூன்றாண்டுகளுக்கு உரிமம் மற்றும் சுங்கம் அல்லது கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பராமரிப்பு செய்யப்பட்ட 10 இனங்களுக்கான முதலாம் ஆண்டு உரிமத்திற்கு (2024–2025)ம் ஆண்டிற்கு) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் நகராட்சி அலுவலத்தில்

பகிரங்கமான ஏலம் விடவும், ஏல அறிவிக்கைகள் 300 பிரதிகள் ஒப்பந்தப்புள்ளி கோரி அச்சிடவும் ஏல அறிவிப்பை மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் அவர்கள் மூலமாக தினசரி நாளிதழில் ஒருமுறை விளம்பரத்தவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமை ஆணை விபரம் | தேவையான சொத்து மதிப்பு சான்றிதழ் மதிப்பு (ஒவ்வொரு இனத்திற்கும் | சொத்து மதிப்பு சான்றிதழுக்கு பதில் செலுத்த வேண்டிய தொகை (ஒவ்வொரு இனத்திற்கும் | சொத்து மதிப்பு சான்றுடன் செலுத்த வேண்டிய டேவணித் தொகை (ஒவ்வொரு இனத்திற்கும் | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய முன்பணத் தொகை (ஒவ்வொரு இனத்திற்கும் | 1994–ஆம் வருடத்திய கலால் வரிச்சட்டத்தின் செக்ஷன் 90– இன்படி செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| 1 | 1வது வார்டு தாந்தோன்றி விநாயகர் கோவில் அருகிகில் உள்ள பெண்கள் கழிப்பிடம். | 25000 | 3000 | 1000 | மொத்த ஏலத் தொகையில் முழு தொகையும் | குத்தகை தொகையில் GST செலுத்தப்பட வேண்டும் |
| 2 | 1வது வார்டு ஓம் காளியம்மன் கோவில் பின்புறம் உள்ள பெண்கள் கழிப்பிடம் | 25000 | 3000 | 1000 | | |
| 3 | 4வது வார்டு நாட்டாகவுண்டன் புதூர் பெண்கள் கழிப்பிடம் | 25000 | 3000 | 1000 | | |
| 4 | 13வது வார்டு சின்ன வீதி ஆண்கள் கழிப்பிடம் | 25000 | 3000 | 1000 | | |
| 5 | 20வது வார்டு பெரியார் நகர் ஆண்கள் கழிப்பிடம் | 75000 | 7500 | 3000 | | |
| 6 | 4வது வார்டு பாவடித்தெரு ஓம்காளியம்மன் கோவில் பின்புறம் உள்ளஆண்கள் கழிப்பிடம் | 25000 | 3000 | 1000 | | |
| 7 | 5வது வார்டு புதன் சந்தை யுனிவர்சல் மாடல் பெண்கள் கழிப்பிடம் | 25000 | 3000 | 1000 | | |
| 8 | 5வது வார்டு புதன் சந்தை ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம் | 25000 | 3000 | 1000 | | |
| 9 | 15வது வார்டு திருச்செங்கோடு ரோடு மேற்கு ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம் | 25000 | 3000 | 1000 | | |
| 10 | 19வது வார்டு ஆவாரங்காடு யுனிவர்சல் மாடல் ஆண்கள் கழிப்பிடம் | 40000 | 4000 | 2000 | | |

<u>அலுவலக குறிப்பு</u>

1) ஆண்டு குத்தகை இனங்களை (10 இனங்களை) 2024–2025–ஆம் முதலாம் ஆண்டிற்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலமிட அனுமதிக்கலாம். அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு அரசாணையில் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) ஏல அறிவிக்கைகள் அச்சிடவும் அதற்காகும் உத்தேச செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) ஏல அறிவிப்பை தினசரி நாளிதழில் ஒரு முறை விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தை வழங்கவும் அனுமதிக்கலாம்.

4) இயற்கை இடர்பாடுகளினால் ஒப்பந்ததாரருக்கு ஏற்படும் இழப்பீடுகளுக்கு நகராட்சி பொறுப்பு ஏற்காது.

கோப்பு எண் 2241/2014/சி1

**தீர்மான எண்.274 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.24</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பொருட்டு எலந்தக்குட்டை கிராமத்தில் நகராட்சிக்கு சொந்தமான 20 ஏக்கர் நிலத்தில் பஞ்சாயத்து எல்லையில் அமைக்கப்பட உள்ளதால், அவ்விடத்தில் மண்பரிசோதனை செய்வது அவசியம் என்பதால், அப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.035/2023 /இ1

**தீர்மான எண்.275 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.25</u>

பள்ளிபாளையம் நகராட்சி எல்லையினை ஒட்டியுள்ள பஞ்சாயத்துகளில் இருந்து துவங்கும் ஓடை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 7ல் துவங்கி நகராட்சி அலுவலகம் முன்புறம் சென்று பேருந்து நிறுத்தம் வழியாக காவிரி ஆற்றில் கலக்கும் வண்ணம் அமைந்துள்ளது. மேற்சொன்ன ஓடை தூர்வாரப்படாமல் இருபுறமும் செடிகொடிகள் வளர்ந்து, மழைக்காலங்களில் தண்ணீர்

அதிகமாக வரும் சமயங்களில் ஓடையில் செல்லும் தண்ணீர் சாலையில் வழிந்தோடி பொதுமக்களுக்கும், வாகன போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக அமைந்து விடுகிறது. எனவே, வார்டு எண் 7 முதல் நகராட்சி அலுவலகம் முன்பு வரை ஓடையினை Hitachi கனரக வாகனத்தினை பயன்படுத்தி தூர்வாரி இருபுறமும் உள்ள வளர்ந்துள்ள செடி, கொடிகளை சுத்தம் செய்வது அவசியமாகும். மேலும், வார்டு எண் 4ல் ஆற்றங்கரையோரப் பகுதியினை சுத்தம் செய்யவும், வார்டு 19 மீனவர் தெரு பகுதியில் ஆற்றங்கரையோர பகுதியினை சுத்தம் செய்யவும் ஆகும் செலவினம் ரூ.3,20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1592/2023/இ1

**தீர்மான எண்.276 நாள். 29.09.2023**

அனுமதிக்கப்பட்டது.